# ஆடிப்பூர நன்னாளில்.



ஸ்ரீவில்லிபுத்தூர் ஸ்ரீ ஆண்டாள்
(கோதாபிராட்டி)

ஆடிப்பூர நன்னாளில் அவதரித்த நீயும்,
சூடிக்கொடுத்த மாலைதனை திருமாலும் ;
தேடிவந்தே அணிச்செய்த திருமகளே !

ஆடிப்பூர..........

வில்லிபுத்தூர் திருத்தலமதில் ஓர் நாள் ,
விஷ்ணுசித்தர் இல்ல துளஸிவனமதில் ;
அல்லிக்கொடிப் போன்று தோன்றி பின் ,
விஷ்ணுவையே கணவனாய் பெற்றவளே !

ஆடிப்பூர.......

பூமாலைதொடுத்து நீயும் அணிந்தபின் ,
திருமாலுக்கு அணிவித்து மகிழ்ந்தவுன் ;
பாமாலையில் மனம் உருகியே அந்தத் -
திருமாலும் உன்னை ஏற்க ச்செய்தவளே !

ஆடிப்பூர......